**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC 61 of 2017

Depositions of PW - 3 witness for ________ { Prosecution / Defence / Court

Name : புவனேஷ்வரி

Father's Name : க/பெ. கதிர்வேல்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th **day of October** 2025.

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்போது கோவை பாரதி நகரில் குடியிருந்து கொண்டு பிஎஸ்ஜி மருத்துவமனையில் பணி செய்து வருகிறேன். சம்பவத்தில் இறந்த கதிர்வேல் எனது கணவர். கடந்த 19.04.2015 ஆம் தேதி மாலை சுமார் 35 மணி அளவில் நான் வீட்டில் இருந்த பொழுது எனது பெரிய மாமனார் மகன் சக்திவேல் என்பவர் எனக்கு போன் செய்து என் கணவர் கதிர்வேல் அவர்களுக்கு அவினாசி ரோட்டில் லீ மெரிடியன் ஓட்டல் தாண்டி நீலாம்பூர் ஸ்ரீ அன்னை டவர்ஸ் அருகில் விபத்து ஏற்பட்டு விட்டதாகவும் ஆம்புலன்ஸ் மூலம் அவரை கேம்சிகெச் மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாகவும் தகவல் கூறினார். நான் உடனே எனது உறவினர்களுக்கு தகவல் சொல்லிவிட்டு புறப்பட்டு கேம்சிகெச் மருத்துவமனைக்கு சென்று பார்த்த பொழுது எனது கணவர் கதிர்வேல் அவர்களுக்கு பலத்த ரத்தக்காயம் ஏற்பட்டு மயக்க நிலையில் சிகிச்சையில் இருந்தார். விபத்து சம்பந்தமாக எனது பெரிய மாமனாரின் மகன் சக்திவேல் அவர்கள்

சூலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

2. சிகிச்சையில் இறந்த எனது கணவர் கதிர்வேல் சிகிச்சை பலனின்றி 21.04.2015 ஆம் தேதி மாலை 5 மணிக்கு மருத்துவமனையில் இறந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தார்கள். பின்னர் மறுநாள் எனது கணவரின் பிரேதத்தின் மீது காலை 09.30 மணிக்கு போலீசார் மருத்துவமனை சவக்கிடங்கு அருகே போலீசார் எனது கணவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டார்கள். அப்பொழுது நான் உடன் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவ விபத்தானது எனது கணவரின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.10.08 17:03:55 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**